தான தான தான தான தான

உப்பளக்காற்றே உப்பளக்காற்றே
உனக்குத் தெரியுமா கண்ணின்
ஓரங்கள் யாவும் ஈரங்கள் ஆகும் காரணம் புரியுமா

கரியவேங்கை சுபேசன் குமரேசனோடு குமுதன்
இவர்களோடு நிகராய் செங்கதிரும் எழுந்து நடந்தான்

உப்பளக்காற்றே உப்பளக்காற்றே

ஆனையிறவுக்குள் போனவர் மீண்டமை
காணத்திரும்பவில்லை அந்த
உப்புக்கடலதும் உள்ளே நடந்ததைச்
சொல்ல விரும்பவில்லை

உப்பளக்காற்றே உப்பளக்காற்றே

சாமம் கழிந்து போகும் நேரம்
தேசப்புயல்கள் வீசின 2 பகை
பேசும் தொடர்பு கோபுரம் சாய்ந்து
பேச்சிழந்து போனது

உப்பளக்காற்றே உப்பளக்காற்றே

கரிய புலிகள் இவர்கள் நடந்த
திசையில் புதிய உதயம் 2 எங்கள்
தலைவன் வளர்க்கும் கரிய புலிகள்
நெருப்பில் குளித்து நிமிரும்

உப்பளக்காற்றே உப்பளக்காற்றே